விலை ரூபா 1 25

REGISTERED AS A NEWSPAPER

# முரசொலி

தேசிய தமிழ்த் தினசரி

MURASOLI

முரசு 1 ஒலி 158 புதன் 06 05 1987 (சித்திரை 23) றம்ழான் 07

## யாழ் குடாநாடு இருளில் மூழ்கலாம்

யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதிலும் மின் வெட்டை விரைவில் அமுலுக்குக் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக நம்பகரமாகத் தெரிய வந்துள்ளது. தொடர்ச்சியாக சில தினங்களை இருளில் மூழ்கடிக்கச் செய்து, பரவலான இரவு நேரத் தாக்குதலை மேற்கொள்வதே அரசாங்கத்தின் திட்டமென்று கூறப்படுகின்றது. மண்டைதீவுக்கு இரண்டு கடற்படைக் கப்பல்கள் வந்துள்ளமையும், ஆஸ்பத்திரியை வெள்ளிக்கிழமையுடன் மூடுமாறு உத்தரவிட்டுள்ளமையையும் மின்வெட்டை

...6 ஆம் பக்கம் பார்க்க



யாழ். ஆஸ்பத்திரியை நாளை மறுதினத்துடன் மூடுமாறு அரசாங்கம் விடுத்துள்ள உத்தரவை ஆட்சேபித்து ஆஸ்பத்திரி சுப்பிரின்டன் டாக்டர் சி. எஸ். நச்சினார்க்கினியன் தலைமையில் டாக்டர்கள், ஊழியர்கள், தாதிகள் செயலகத்துக்கு நேற்று ஊர்வலமாகச் சென்ற போது எடுக்கப்பட்டது (படம்: வி. ஆனந்த்)

### ★ ஜனாதிபதியை நேரில் சந்தித்து ஆஸ்பத்திரி நிலைமை பற்றிப் பேச

# யாழ். உயர் அதிகாரிகள் குழு இன்று கொழும்பு செல்கின்றது


(அலுவலக நிருபர் கிறிஸ்ரி ரஞ்சன்)

யாழ். போதனா வைத்தியசாலையை மூடுமாறு விடுக்கப்பட்ட உத்தரவை தடுத்து நிறுத்துவதற்கான இறுதி முயற்சியை எடுக்கும் பொருட்டு உயரதிகாரிகளைக் கொண்ட குழுவினர் இன்று அவசர அவசரமாக கொழும்பு செல்கின்றார்கள்.

இந்தக்குழுவில் யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் சி.எஸ்.நச்சினார்க்கினியன், யாழ். பல்கலைக்கழக வைத்திய பீடாதிபதி பேராசிரியர் சிவஞானசுந்தரம், வைத்தியசாலை நிர்வாகக்குழுவைச் சேர்ந்த டாக்டர் சிவகுமாரன், வைத்தியசாலைக்கமிட்டி உறுப்பினர்களான திரு. எஸ். சிவஞானம், டாக்டர் பிலிப்ஸ், பிரஜைகள் குழுவின் முக்கிய உறுப்பினரான சட்டத்தரணி இ. பாலசுப்பிரமணியம் உட்பட மற்றும் பலர் இக்குழுவில் இடம்பெறுகின்றனர்.

இந்தக்குழுவினர் இன்று காலை பிரத்தியேக பஸ்வண்டி ஒன்றில் கொழும்பு செல்கின்றனர். இவர்கள் நாளை காலை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை

—6ஆம் பக்கம் பார்க்க



கோப்பாய் பாலத்தில் மினிபஸ் மீது ஹெலி நடத்திய சூட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்ட அச்சுவேலியைச் சேர்ந்த சின்னத்தம்பி பாக்கியராசாவின் சடலம்.

### ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா குற்றச்சாட்டு

## வெளிநாட்டு கூலிப்படையால் பிரச்சினை மோசமாகியுள்ளது!

வெளிநாட்டு ஏஜன்ஸிகளையும் கூலிப்படைகளையும் ஜெயவர்த்தனா அரசு இங்கு இறக்குமதி செய்ததால்தான் இனப்பிரச்சினை மோசமடைந்துள்ளதென்று கூறியுள்ள ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, பிரச்சினையை வளர்த்து அதன்மூலம் தேர்தலைப் பின்போடுவதே ஜெயவர்த்தனாவின் நோக்கம் என்றும் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலிய மொஸாட்படை சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்த கிழக்கு மாகாணத்தை லெப்னானாக மாற்றியுள்ளதென்றும் அவர்குற்றம் சாட்டினார்.

இந்தியா இனப்பிரச்சினையைத் தீர்க்க விருப்பம்காட்டி வருகின்ற போதிலும், இங்கு வந்துள்ள கூலிப்படைகள் அதனைத் தடுத்துவருகின்றன என்றும் அவர் மேலும் சொன்னார்.

கொழும்பில் பத்திரிகையாளர் மாநாட்டில் இவ்விபரங்களைத் தெரிவித்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, ஜெயவர்த்தனாவின் பல்வேறு நடவடிக்கைகளையும் வெகுவாகச் சாடினார்.

## மினிபஸ் மீது ஹெலி சுட்டு வயோதிபர், இளைஞன் பலி

பிரயாணிகள் வான் ஒன்றின் கூரையின் மேல் இருந்து பயணம்செய்தவர்களை நோக்கி ஹெலிகப்டர் துரத்திச்சுட்டதில் வயோதிபர் ஒருவரும், இளைஞன் ஒருவனுமாகஇருவர் கொல்லப்பட்டனர். இச்சம்பவம் நேற்றுக்காலை 9-30 மணியளவில் கோப்பாய் பாலத்தில் நிகழ்ந்தது. ஐந்துக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை யாழ். நகரில் இருந்து சிறிய எல்ப் வான் ஒன்று அதிக பயணிகளுடன் கேரதீவுக்கு புறப்பட்டுச் சென்றது. இந்த வானின் கூரையின்மேல் அச்சமயம் பதினைந்து பிரயாணிகள் ஏற்றப்பட்டிருந்

—6 ஆம் பக்கம் பார்க்க

## விமான பாதை தகர்ப்பு

மூல்லைத்தீவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள விமானத்தளத்தின் மீது ஈரோஸ் போராளிகள் நேற்றுக்காலை 82 எம்.எம்.மோட்டார் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலால் விமான ஓடுபாதையும், காவல் அரண்ஒன்றும் சேதமாக்கப்பட்டுள்ளது.

இதனால் நேற்று இத்தளத்தை திறந்து வைப்பதற்காக தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலியை ஏற்றிவந்த பொம்பர் விமானமொன்றும், பயணிகள் விமானமொன்றும் தரையிறங்க முடியாமல் திரும்பிச் சென்று விட்டன.

### கைதிகள் பரிமாற்றத்தில் விடுதலையான

## குருநகர் காமினி வீரமரணம்

மட்டக்களப்பிலுள்ள வந்தாறுமூலையில் விடுதலைப் புலிகளுக்கும் ராணுவத்தினருக்கும் இடையே நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற கடும் மோதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் இரண்டு விடுதலைப்புலிகளும் வீரமரணமடைந்தார்கள். கடந்த டிசம்பர் மாதம் இடம்பெற்ற கைதிகள் பரிமாற்றத்தின்போது விடுதலையான குருநகரைச் சேர்ந்த காமினி (20), தாஸன் ஆகிய இரண்டு புலிகளுமே இம்மோதலின்போது கொல்லப்பட்டார்கள்.

இரவு பத்து மணியளவில் முறக்கொட்டாஞ்சேனையில் இருந்து புறப்பட்ட இராணுவத்தினர் வந்தாறுமூலையை வந்தடைந்தபோதே இரு தரப்பினருக்கும் இடையே நேரடி மோதல் இடம்பெற்றது. இம்மோதலிலேயே இரு போரா

—6 ஆம் பக்கம் பார்க்க

பட்டியல்- 3

# வைத்தீஸ்வரா வித்தியாலய மண்டப ஆங்கிலப்பயிற்சி பல்கலைக்கழக மாணவர்

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பல்வேறு கற்கை நெறிகளுக்கும் தெரிவான யாழ். மாவட்ட மாணவர்களுக்கு ஆறு பிரதான பாடசாலைகளில் ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள் நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளன.

இவற்றில் யாழ். இந்துக் கல்லூரியிலும், மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் இடம்பெறும் பயிற்சிக்குத் தெரிவான மாணவர்களின் விபரம் நேற்றும், நேற்று முன்தினமும் வெளியிடப்பட்டது.

யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறும் ஆங்கில பயிற்சி வகுப்புக்குச் சமுகமளிக்க வேண்டிய மாணவர்களின் விபரம் வருமாறு:-

விவசாய விஞ்ஞானம்:- ஜே. ஏ. அந்தோனிப்பிள்ளை [நாரந்தனை, வடக்கு] ரீ. ஜெயராகவன் [நல்லூர்], என். மஞ்சுளா [அரியாலை], கே. எஸ். முகுந்தன [திருநெல்வேலி].

உயிரியல் விஞ்ஞானம்:- எஸ். செல்வரட்ணம் [யாழ்ப்பாணம்], வை. எஸ். சக்திவேல் [கொழும்பு], எம். எல். செல்வரட்ணம் [யாழ்ப்பாணம்], பீ சிவசகதி [யாழ்ப்பாணம்], எஸ். சுகிர்தா [கோண்டாவில்], எஸ். சுரேந்தினி [கோண்டாவில்], ஏ. ஜி. சுரேந்திரகுமார் [யாழ்ப்பாணம்], ஏ. சில்வெஸ்டர் [யாழ்ப்பாணம்]. டபிள்யூ. எஸ். தம்பிராஜா [சுண்டுக்குளி], கே. தர்மலிங்கம் [அரியாலை], ஆர். பாலசிங்கம் [யாழ்ப்பாணம்], எஸ். பாலசிங்கம் [யாழ்ப்பாணம்], எம். வீ. தேவானந் [அரியாலை], வை. ஞானமொழி [யாழ்ப்பாணம்], ஈ. ஏ. ஹரோல்ட் [யாழ்ப்பாணம்], ஏ. ரீ. ஜெகதீஸ்வரன் [நெடுந்தீவு], எஸ். மாலினி [யாழ்ப்பாணம்], வீ. மஞ்சுளா [யாழ்ப்பாணம்], எம். வீ. மொகமட் பௌஸ் [யாழ்ப்பாணம்], ஆர். முருகதாஸ் [யாழ்ப்பாணம்], கே. பொன்னம்பலம் [திருநெல்வேலி], எஸ். இரத்தினம் [கொக்குவில்], யூ. இரட்ணசபாபதி [வண்ணார்பண்ணை], ஈ. இரட்ணசபாபதி [கொக்குவில்] ஆர். சபாரட்ணம் [கோண்டாவில்], ஜே. தயாபரன் [யாழ்ப்பாணம்], எம். ரீ. டீ. தியோபிளஸ் [யாழ்ப்பாணம்], எஸ். தேவமனோகரி [யாழ்ப்பாணம்] ஜீ. திருமகள் [யாழ்ப்பாணம்] யூ. திருநாவுக்கரசு [நல்லூர்], ரீ. திருமனோகரி [யாழ்ப்பாணம்] யூ. உமாசங்கர் [யாழ்ப்பாணம்], ஜீ. வசந்தரூபா [யாழ்ப்பாணம்], டீ. யசோதா [அரியாலை], கே. யோகராணி [நயினாதீவு],

பொறியியல் 1 :- வீ. பீ. கொன்ஸ்ரன்ரைன் [யாழ்ப்பாணம்], எஸ். எஸ். ஆர். இளங்குமரன் [சுண்டுக்குளி], ஜே. எம். பிரான்ஸிஸ் [சுண்டுக்குளி], என். கேதீஸ்வரன் [சந்தர்மடம்], ரீ. மகாசிவம் [வண்ணார்பண்ணை], யூ. டீ. எச் ஏ. அப்புஹாமி [மாரவில] என். மணிவண்ணன் [வண்ணார்பண்ணை] நவநீதகுமாரி [அரியாலை]. ரீ. நவநீதன் [நல்லூர்]. கே. எல். பஞ்சலிங்கம் [யாழ்ப்பாணம்] எஸ். பரந்தாமன் [யாழ்ப்பாணம்], பீ. பசுபதி [யாழ்ப்பாணம்], வீ. பிரபாகரன் யாழ்ப்பாணம்], ரீ. பிரபாகரன் [கொக்குவில்], கே. ரமேஷ்குமார் [யாழ்ப்பாணம்], கே. ரவிசங்கர் [யாழ்ப்பாணம்], செந்தில்நாதன் [யாழ்ப்பாணம்], எஸ். சிவஜெயம் [வேலணை], ஈ. செல்வராஜா [கோண்டாவில்], எஸ். சிவானந்தன் [யாழ்ப்பாணம்]. வீ. தியாகராஜா [அரியாலை]. பீ. திஸநாயகம் [சுண்டுக்குளி]

விவசாயம் :- கே. கைலைநாதன் [திருநெல்வேலி]

பொறியியல் 2 :- என். பி. ஞானரஞ்சன் [திருநெல்வேலி], கே. ரவீந்திரன் [யாழ்ப்பாணம்]. சக்திகுமரன் [நல்லூர்]. எஸ். விமலன் [திருநெல்வேலி]

பௌதிக விஞ்ஞானம்:- கே. அகிலன் [நல்லூர்], எம். வீ. அமரேந்திரா [நீராவியடி], பீ. அம்பிகைபாகம் [யாழ்ப்பாணம்], எஸ் அன்ரன் வின்ஸ்லஸ் [யாழ்ப்பாணம்], ஜே. அரவிந்தன் [யாழ்ப்பாணம்], ஆர். ஜே. சந்திரன் [கொக்குவில்], வீ. கணேஸ்வரன் [கொக்குவில்]. ஜே. குணசீலன் [யாழ்ப்பாணம்]. எம். எச். கியூபேர்ட் [யாழ்ப்பாணம்], கே. இதயராஜா [வேலணை]. ஜீ. பீ. ஜெயவீரசிங்கம் [சுண்டுக்குளி], ஆர். ஜெகதாஸன் [கோப்பாய்], எஸ். ஜெயகுமாரன் [கொக்குவில்]. கே. ஜெயசங்கர் [யாழ்ப்பாணம்], எஸ். ஹேமாவதி [யாழ்ப்பாணம்], ஏ. கதிர்காமநாதன் [யாழ்ப்பாணம்], எம். மகாலிங்கசிவம் [யாழ்ப்பாணம்]. கே கே. மகிலேஸ்வரன் [நல்லூர்], எம். மாணிக்கவாசகம [கொக்குவில்], வீ. மதிதரன் [கொக்குவில்], கே. எஸ். மதியழகன் [குருநாகல்], ஏ. முருகுசெழியன [நல்லூர்]. எஸ். நந்தபாலன் [கோப்பாய்]. எம். எச். ஜே. பவளக்கோன் [யாழ்ப்பாணம்], என். இராகவன் [யாழ்ப்பாணம்]. கே. ராஜன் [யாழ்ப்பாணம்], பீ. ரவிச்சந்திரன் [கொழும்பு], ஜே. சத்தியசீலன் [யாழ்ப்பாணம்], எஸ். சதீஸ்மோகன் [யாழ்ப்பாணம்], எம். கே சாந்தகுமார் [சுண்டுக்குளி], பீ சிவகுமாரன் [வவுனியா], எஸ். சுகேந்திரன் [யாழ்ப்பாணம்] எல். சுமித்திரா [வண்ணார்பண்ணை]. எஸ். சுந்தரலிங்கம் [பதுளை], ரீ. எஸ். சுரேந்திரன் [யாழ்ப்பாணம்], ரீ. சுதர்ஸன [திருநெல்வேலி], டீ. தர்மசீலன் [நல்லூர்], கே தயாளன் [யாழ்ப்பாணம்], ரீ. தேவநாதன் [புத்தூர்]. ரீ. திருமகள் [கோப்பாய்], எஸ். வாசுகி [நல்லூர்], ஈ. ஏ. கே. வேதநாயகம் [யாழ்ப்பாணம்], என். விமலநாதன் [கோப்பாய்], ஏ. விபுலானந்தன் [வேலணை], எம். வித்தியானந்தநேசன் [யாழ்ப்பாணம்]. ரீ. விவேகானந்தா [நல்லூர்], எஸ். யோகராஜசிங்கம் [அரியாலை].

## நாரந்தனையில் கலைவிழா

(காவலூர்)

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை நாரந்தனை உபஅலுவலகத்தின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் சனசமூக நிலையங்களின் சமாசத்தால் வெகு விரைவில் கலைவிழாவொன்று நடாத்தப்படவுள்ளது.

இதன் முதல் நடவடிக்கையாக மேற்படி உபஅலுவலக எல்லைக்குட்பட்ட எழுத்தாளர்களையும் மற்றும் பேச்சுவல்லோரையும் ஊக்கப்படுத்துமுகமாக சிறு கதைப்போட்டி ஒன்றையும் பேச்சுப்போட்டி ஒன்றையும் நடாத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# ஆஸ்பத்திரியை மூடுவதால் ஏற்படக்கூடிய பாதிப்புகள்

28-4-87 இல் இலங்கைப் போதனா வைத்தியசாலைகள் அமைச்சினால் சட்டபூர்வமாக அனுப்பப்பட்டு, 3-5-87 இல் வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் கிடைக்கப்பெற்ற வைத்தியசாலையை(Teaching Hospital - Jaffna) 8-5-87 இல் மூடிவிடும்படி கிடைக்கப்பெற்ற கடிதத்தின் சார்பாக இங்கு நிகழப்போகும் பாதிப்புகளும் விளைவுகளும் ;

வட பிராந்தியத்திலுள்ள சகல வசதிகளும், நவீன நிபுணத்துவ வைத்திய முறைகளும் கொண்ட ஒரேயொரு வைத்தியசாலை யாழ். போதனா வைத்தியசாலையாகும். இங்கு முழுமையாக இயங்கக்கூடிய சத்திர சிகிச்சை நிலையத்தில் ஒரு நாளைக்கு சராசரி 35 தொடக்கம் 40 நோயாளிகள்வரை சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.

முழுமையாக இயங்கக்கூடிய நோய நிதான ஆய்வுகூடத்தில் ஒரு நாளைக்கு 1100 தொடக்கம 1300 வரையான பரிசோதனைகள் செய்யப்படுகின்றன.

இங்குள்ள எக்ஸ்ரே கதிர்ப்பட நிலையத்தில் ஒருநாளைக்கு சராசரியாக 100 நோயாளிகளுக்கு விசேடமான முறையில கதிர்ப்படம் எடுக்கப்படுகிறது.

மேற்படி வைத்தியசாலையில் ஒருநாளைக்கு மூவாயிரம்வரையிலான நோயாளர்கள் உள்நோயாளர்களும், வெளிநோயாளர்களுமாகச் சேர்த்து நிபுணத்துவ கிளினிக்கில் சிகிச்சை பெற்றுவருகிறார்கள்.

வட பிராந்தியத்திலுள்ள வைத்தியசாலைகளில இங்கு மட்டுமதான் கண் சிகிச்சை, காது, மூக்கு, தொண்டைச் சிகிச்சை, முறிவு வைத்தியத் திறனான கிகிச்சை, சரும நோய், நரம்புச் சிகிச்சை நிலையம், மார்பு சத்திர சிகிச்சை, ஆய்வுகூடப் பரிசோதனை நிலையம்ஆகியன விசேடமாக நிபுணத்துவ வைத்திய கலாநிதிகளால் சிகிச்சைஅளிக்கப்பட்டு வருகிறது. உதாரணமாக, வவுனியா தொடக்கம் (90 மைல்களுக்கு அப்பாலிருந்தும) இங்குதான் சிகிச்சை பெற வருகிறார்கள்.

இந்த வைத்தியசாலையில் மட்டும கிட்டத்தட்ட இங்குள்ள 15 லட்சம் குடாநாட்டு மக்களும் சிகிச்சை பெறும் வாய்ப்பான நிலையில் உள்ளனர்.

இங்குள்ள ஏனைய வைத்தியசாலைகளிலும் பார்க்க இந்த வைத்தியசாலையில் மட்டுமே அவசர சிகிச்சைப் பிரிவும், இரத்த வங்கியும், வசதியாகவும நோயாளிகளுக்குச் சிறப்பான சேவை செய்யக்கூடிய முறையிலும் அமைந்துள்ளது.

மேலும இங்குள்ள வேறு வைத்தியசாலைகளில நிபுணத்துவ வைத்தியநிலையம் இல்லாதிருப்பதால (பருத்தித்துறை வைத்தியசாலை மட்டும் ஓரே ஒரு வைத்திய நிபுணர் சேவையாற்றுகிறார்.) வைத்திய நிபுணர்கள வெளியில இயங்கமுடியாத நிலையில் இருக்கிறார்கள.

வடபிராந்தியத்தல தெல்லிப்பழை வைத்தியசாலையைத் தவிர, எக்ஸ் கதிர் படநிலையம இங்குமட்டுமதான் விசேடமாக இயங்குகின்றது. (மன்னார் வைத்திய நிலைய எக்ஸ்ரே நிலையம் மூடப்பட்டுள்ளதால் அங்குள்ள நோயாளிகளும் இங்கு சிகிச்சை பெறவேண்டிய நிலையில் உள்ளனர்.)

ஆயிரத்துப் பதினைந்து (1015) படுக்கைகளைக் கொண்ட இவ்வைத்தியசாலையில் சராசரியாக நாளொன்றுக்கு நூற்றியிருபத்தைந்து (125) வரையான நோயாளிகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டும், எழுநூறு நோயாளிகள் (700) வரை வெளிநோயாளர் பகுதியில் (O. P D) சிகிச்சைபெற்றும், எழுநூறு நோயாளிகள் (700) வரை கிளினிக் (விசேட சிகிச்சை நிலையங்கள்) களில் சிகிச்சை பெற்றும், ஆயிரம் (1000) நோயாளர்கள் வரை வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்றும், நாளொன்றுக்கு 10 தொடக்கம் 12 குழந்தைகள் பிறந்தும், சராசரியாக நூற்றைந்து தொடக்கம் நூற்றுப்பத்து (105 — 110) வரையான நோயாளிகள் எக்ஸ் கதிர்ப்பட பரிசோதனைக் குட்படுத்தப் பட்டும், ஆயிரத்து இருநூறு நோயாளிகள்வரை ஆய்வுகூட பரிசோதனைக்குட்படுத்தப் பட்டும், முப்பத்தைந்து தொடக்கம் நாற்பது (35—40) வரையான நோயாளிகள் சாதாரண காலங்களில் விசேட சத்திர சிகிச்சைக் குட்படுக்தப்பட்டும் இவ் வைத்தியசாலையில் மேற்கூறிய விதமாக நோயாளிகள் சிகிச்சைபெற்றும், பராமரிக்கப்பட்டும் வருகிறார்கள்.

இந்த வைத்தியசாலையில் ஐந்து (5) மகப்பேற்று சத்திர சிகிச்சைநிபுணர்களும், நான்கு (4) பொது சத்திர சிகிச்சை நிபுணர்களும், இரண்டு (2) கண் சத்திரசிகிச்சை நிபுணர்களும், ஐந்து (5) பொதுவைத்திய கலநிதிகளும், இரண்டு (2) குழந்தைகள் வைத்திய நிபுணர்களும், சில ஆய்வுகூட விசேட பரிசோதகர்களும் கடமையாற்றுகிறார்கள். மற்றும் எழுநூறு ஊழியர்கள் வைத்திய மற்றும் சகல தரப்பினரும் கடமையாற்றுகின்றார்கள்.

இங்கு ஒரு ஒப்பிறேசன் தியேட்டர் (சத்திர சிகிச்சை நிலையம்) மூன்று பகுதிகளில் வேலைகள் நடை பெறுகின்றன.

கட்டிட வசதிகள், மின்சார வசதிகள், ICU பிரிவு (அதி விசேடபராமரிப்புப் பகுதி)அவசர மருத்துவப் பிரிவு (E.U) குழந்தைகள்பராமரிப்புப்பிரிவு B. P. U. இயன் மருத்துவப் பிரிவு (D.P M. )மருந்து சேமிக்கும் களஞ்சிய அறை வசதி, அவசர சிகிச்சைகளுக்கான நோயாளிகள் தங்குமட வசதி, நீர் விநியோகம், வடிகாலமைப்பு முறைகள், பிரேத அறை வசதி, பிரேத விசாரணைப் பகுதி, தாதிகள் பயிற்சிக் கல்லூரி வசதி, மருத்துவ மாணவர்களின கல்வி வசதி, உதவியாளர்களை (Attendants) பயிற்றும் வசதிகள், மருந்துக் கலவையாளர் பகுதிகள். அப்போதிகரி சேவைகள், மற்றும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்திலும் வைத்தியசாலை அமைந்திருப்பதனால் நோயாளிகளுக்கான போக்குவரத்து வசதிகள் போன்றவையும் அடங்கிய முக்கியமான வைத்தியசாலையாக இருப்பதனாலும், இதனை மூடுவதனால் மேற் குறிப்பட்ட வசதிகள் அனைத்தும் தடைப்பட்டு நோயாளர்கள் சிகிச்சை பெற முடியாமல் தினமும் நாற்றுக் கணக்கில் இறக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படும்.

ஏற்கனவே ஏழு தடவைகள் ஷெல் விழுந்து வைத்தியசாலை பாதிப்புற்றது. 7. 3. 87 இல் வெளிநோயாளர் பகுதியில் (O.P.D.) வீழ்ந்த ஷெல்லினால் ஒருவர் கொல்லப்பட்டார். 30. 3. 87 இல் நோயாளர் விடுதி இல. 19, 20 இல், வீழ்ந்த ஷெல்லினால் ஒன்பது பேர் கொல்லப்பட்டும் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட நோயாளிகள் படுகாயமுற்றனர். மேற்படி வைத்தியசாலையை மூடுவதனால் மருத்துவ மாணவர்களின் செய்முறைக் கல்வி பாதிப்படைவதுடன், பரீட்சைக்குத் தோற்ற முடியாமல் பாதிப்படைய நேரிடும்.


நோயாளர் நலன்புரிச் சங்கம்

யாழ். ஆஸ்பத்திரி


## எச், பாஸ்போட் செல்லுபடியாகும்

குடிவரவு-குடியகல்வு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட எச். இலக்கமுடைய கடவுச் சீட்டுக்களின் மூன்றாவது பக்கம் நிறம் மங்கலாய் இருப்பதால் சில இலங்கையர்கள் சவூதி அரேபிய டஹரான் விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


சித்திரச் சிறுவிளம்பரம்

கல்வி

புதிய வகுப்புகள் க. பொ. த. (உயர்) 89 கலை/வர்த்தகம், விஞ்ஞானம். ஆண்டு 4. 5 6, 7. 8, 9, 11 ஆரம்பம்: 9-5-87 பி. ப.3மணி மொடேன் எடியுகேசன் சென்ரர், கரவெட்டி.

04122



அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்

(T.R.R.O.)

எமது நிறுவன அலுவலகம் சேதப்படுத்தப்பட்டமையாலும் இப்பொழுது தொடர்ந்து நடைபெறும் ஆகாயத் தாக்குதல்கள் காரணமாக உதவி நாடி வருவோர் பாதிக்கப்படக் கூடுமாதலாலும் எமது நிறுவன அலுவலகத்தை அதன் இப்போதைய இடத்தில் இருந்து வேறு இடத்திற்கு மாற்றத் தீர்மானித்துள்ளோம். புதிய அலுவலக இடம்பற்றி விரைவில் தெரிவிக்கப்படும். மறு அறிவித்தல்வரை அத்தியாவசிய உதவி தேவைப்படுவோர் பிரஜைகள் குழுக்கள் போன்ற சேம நிறுவனங்கள் மூலமாக செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்,

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்

05016

ஹோமியோபதி வைத்திய ஸ்தாபகர்

# டாக்டர் ஹனிமன் ஞாபகார்த்த விழா

ஹோமியோபதி வைத்திய முறையை உலகிற்கு அறிமுகப் படுத்திய டாக்டர் சாமுவேல் ஹனிமனின் 232 ஆவது பிறந்த நாள் ஞாபகார்த்த விழா அண்மையில் நாவலர் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

வட இலங்கை ஹோமியோபதி சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் விழாவிற்கு டாக்டர் அ. கிருஷ்ணசாமி தலைமை வகித்தார். டாக்டர் பாக்கியநாதர் அத்தனுசியார், டாக்டர் திருமதி பேர்ள் அத்தனுசியார், யாழ். லங்கா ஆயுர்வேதக் கல்லூரி அதிபர் டாக்டர் ஏ. வி. இராசரத்தினம் ஆகியோர் பிரதமஅதிதிகளாக கலந்து கொண்டனர்.

கொடிகாமத்தைச் சேர்ந்த டாக்டர் எவ். ஏ. ரூகல், ஹோமியோபதி வளர்ச்சிக்கும, வட இலங்கை ஹோமியோபதி சங்கத்தின் வளர்ச்சிக்கும் ஆற்றிய சேவையை பாராட்டி டாக்டர். பா. அத்தனுசியாரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

வட இலங்கை ஹோமியோபதி சங்கத்தினால் நடாத்தப்பட்ட ஹோமியோபதி வகுப்புக்களில் சித்தி பெற்றவர்களுக்கு டாக்டர் ஏ. வி. இராசரத்தினம் சான்றிதழ்களை வழங்கினார்.

சித்தியடைந்தவர்கள் பெயர் விபரம் வருமாறு: டாக்டர்கள் ஆர். பரமசாமி, ஆர். பாலகிருஷ்ணன், எஸ். சிவபாலன், திருமதி என். தவநாயகி, எஸ். குலசேகரம், செல்வி எஸ். இந்திராணி. செல்வி எஸ். அனுஷா, ரீ. பரஞ்சோதி, பீ. ஆரா அமுதன், செல்வி கே. சிவதர்ஜினி. தி. பூரணேஸ்வரன், சங். சகோதரி மேரி ஜூடித், செல்வி. ஜி. புஸ்பமலர், டீ. ஜி. எம். யோசப்.

விழா நிகழ்ச்சிகளையடுத்து வட இலங்கை ஹோமியோபதி சங்கத்தின் இருபத்தெட்டாவது ஆண்டு பொதுக் கூட்டமும் இடம்பெற்றது. பின் வருவோர் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: டாக்டர்அ. கிருஷ்ணசாமி, உபதலைவர்கள்: டாக்டர்கள். எவ். ஏ. ரூகல், எஸ். ரீ. புவிராசன், செயலாளர்; டாக்டர் எம். வேலுப்பிள்ளை, உப செயலாளர்: டாக்டர் டீ. ஏ. மத்தியூஸ், பொருளாளர்: டாக்டர் எஸ். சிவநேசன், நிர்வாக சபையும் தெரிவானது.

# 'வறுமையின் நிறம் சிவப்பு' திரைப்பட விமர்சன அரங்கு

[கரவெட்டி]

"இந்தியாவின் பட்டதாரிகள் மத்தியிலான வேலையில்லாத் திண்டாட்டம், சாதிப் பிரச்சினை, மாணவர் போராட்டங்கள், நேர்முகப் பரீட்சையில் தில்லுமுல்லுகள் போன்ற பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாக கே. பாலச்சந்தரின் இத்திரைப்படம் விளங்குகிறது. இரண்டு கவர்ச்சியான நடிகர்களைப் போட்டு ஜனரஞ்சகமாகப் படம் பிடித்திருக்கிறார். என்றாலும் பாலச்சந்தரின் வழக்கமான படங்களை விட இது ஒரு வித்தியாசமான படம் என்பேன்."

இவ்வாறு கட்டைவேலி — நெல்லியடி கலாசார கூட்டுறவுப் பெருமன்றத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட 'வறுமையின் நிறம் சிவப்பு' என்ற திரைப்படம் குறித்த விமர்சன அரங்கை ஆரம்பித்தவைத்துப் பேசிய திரு. நெல்லை க. பேரன் கூறினார்.

இலங்கை வங்கி நெல்லியடிக் கிளை முகாமையாளர் திரு. வே. தில்லைநாதன் பேசுகையில், "தரமான டைரக்டரான கே. பாலச்சந்தர் சில தவறுகளை விட்டிருக்கிறார். பாரதியின் பால் மோகம் கொண்ட கதாநாயகனை (கமலஹாசன்) வேலை பெறுவதற்காக 'தமிழ் தெரியாது' என்று பொய் சொல்ல வைத்திருக்கிறார். இப்படத்தில் காண்பிக்கப்படும் அளவிற்கு இந்தியாவில் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கும் என்பது சந்தேகமே" என்றார்.

திரு தெணியான் பேசுகையில், "வறுமையின் நிறம் சிவப்பு' என்று படத்தின்பெயர் கொடுத்த தாக்கம் இப்படத்தைப் பார்த்தபோது ஏற்படவில்லை" என்றார்.

குப்பிளான் திரு. ஐ. சண்முகன் கருத்துத் தொவிக்கையில், "மரபுரீதியான இந்தியதமிழ்ப் படவரலாற்றில் பாலச்சந்தர் மாற்றத்தைஏற்படுத்திய பெருமைக்குரியவர். பாரதியாரின் நூற்றாண்டு விழாவையொட்டியே இப்படமும் தயாரிக்கப் பட்டதாக அறிகிறோம். பாலச்சந்தர் பாரதியார் வாழ்க்கையை இதய சுத்தியுடன் கதையாக எடுக்கவிருக்கிறார். அதற்கு கதாநாயகனாக(பாரதியார்) கமலஹாசனையே தெரிவு செய்துள்ளார்" என்றார்.

திரு. த. கலாமணி பேசுகையில், "இப்படத்தில் ஓர் ஊமை ஓவியக்கலைஞர் வருகிறார். நவீன ஓவியங்கள்பற்றிய பல சிந்தனைக்குரிய கருத்துக்கள் பற்றியும் இப்படம் தெரிவிக்கிறது" என்றார்.

திருவாளர்கள் சத்தியமூர்த்தி, கே. நீக்கிலஸ், வ. திவ்வியராஜன் ஆகியோரும் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இறுதியாக விமர்சன அரங்கை முடித்துவைத்துப் பேசிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினதும், கலாசார கூட்டுறவுப் பெருமன்றத்தினதும் தலைவர் திரு. த. சிதம்பரப்பிள்ளை பேசுகையில், "இப் படத்தில் புதுமையாக ஒன்றும் இல்லை. உண்மையான வறுமை தெரியவில்லை" என்றார்.

---

## அகதிகளுக்கு உதவி

காங்கேசன்துறைப் பகுதியில் இடம்பெறும் இராணுவத்தினரின் தாக்குதல்களால் இடம் பெயர்ந்த பல குடும்பங்கள் சங்கானை கலாசார மண்டபத்தில் அகதிகளாக வந்து தங்கியிருக்கின்றன. இவர்களுக்கு உதவுமாறு சங்கானை புனர்வாழ்வுக்கழகம் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து சங்கானை கிராமஅபிவிருத்திச் சங்கம் ஆயிரம் ரூபாவை இவர்களுக்குக் கொடுப்பதெனத் தீர்மானித்துள்ளது.

## கழிவு நீரால் பழுதாகும் வீதி

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்புப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு அருகில் உள்ள கிணற்றில் பாவிக்கப்படும் கழிவு நீர் நகர வீதியில் வெள்ளமாகக் காட்சியளிக்கிறது. அண்மையில் இதனை வீதிக்கு வராமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டும், மீண்டும் இந்நீர் வீதியில் காணப்படுவதாகப் பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## தொழுநோய் சிகிச்சை

(வட்டுகோட்டை)

காட்டுப்புலம் பிரதேசத்தில் தொழுநோயால் பாதிக்கப் பட்ட மக்களில் மூன்றிலொரு பங்கினர் இப்போது பூரண சுகம் அடைந்துள்ளதாக இப் பகுதிக்கான வைத்திய வசதிகள் செய்யும் குழுவின் அதிகாரிஒருவர்தெரிவித்துள்ளார். கடந்த வருடம் நடாத்தப் பட்ட தொழுநோய் வைத்திய பரிசோதனையில் சுமார் 180 பேர் இந்த நோயின் தாக்கங்களுக்குட்பட்டிருந்து வைத்திய சிகிச்சைபெற்று வந்தது குறிப்பிடத்தக்கது.

## தரமுயர்த்த கோரிக்கை

(கொழும்புத்துறை)

தரம் குறைக்கப்பட்ட நாவாந்துறை சென். மேரிஸ் சன சமூக நிலையத்தை மீண்டும் 'அ' பிரிவிற்குத் தரமுயர்த்தித் தருமாறு யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் கோரப்பட்டுள்ளது. இது சம்பந்தமான மகஜர் ஒன்றை சன சமூக நிலையச் செயலாளர் திரு. சூ. அமிர்தநாதர் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

## அகதிகள் புனர்வாழ்வு அமைப்பு

(சங்கானை)

சங்கானையில் — பொது நூல் நிலையத்தில் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட அகதிகள் புனர்வாழ்வு அமைப்பு நிர்வாகிகள் விபரம் பின் வருமாறு:

தலைவர்:-திரு. பொ. சாம்பசிவம். உப-தலைவர்:- திரு. க. வீரசிங்கம், இணைச் செயலாளர்கள்:- திரு. க. உபேந்திரன், திரு. மா. கணேஸ், பொருளாளர்:- திரு. மு. சுப்பிரமணியம்.

அமைப்பு நிர்வாகக்குழு உறுப்பினர்களாக: திருவாளர்கள் க. அருந்தவராஜா, க. ச. கந்தசாமி கு. முருகேசு, க. திரவியம், பொ. கணேஸ், த. கோவிந்தசாமி, செ. கோபாலகிருஷ்ணன், என். ஸ்ரீராம், மா. ஆனந்தன், நா. நாகலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## ஆச்சிரமத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை

(உடுப்பிட்டி)

அண்மையில் நடைபெற்ற பொம்பர் குண்டுவீச்சுக்குப் பலியான அப்பாவிப் பொது மக்களின் ஆத்மா சாந்தியடைய பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் விசேட பூசைகளையும், ஆராதனைகளையும் நடத்தியது.

மேலும் இதில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு சுமார் பத்தாயிரம் ரூபாவை நிவாரண உதவியாக வழங்க முன் வந்துள்ளது. இச்சம்பவத்தில் உயிர் நீத்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஆயிரம் ரூபாவும் படுகாயமுற்றவர்களுக்கு இருநூற்றைம்பது ரூபாவும் வழங்கப்படும்என சேவாச்சிரமபீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தா அறிவித்துள்ளார்.

## முதலாவது ஆண்டு விழா

(எழுதுமட்டுவாள்)

முகமாலை, வள்ளுவர் சன சமூக நிலையத்தின் முதலாவது ஆண்டு விழாவும் கலை நிகழ்ச்சிகளும் எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ளது. இவ் வைபவத்திற்கு பிரதம விருந்தினராக பளை உதவி அரசாங்க அதிபர் திரு. செ. கந்தசாமியும், சிறப்பு விருந்தினர்களாக முகமாலை பங்குக் குரு வண. பிதா இராசரத்தினம் அடிகளாரும், பளை சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. க. மதுரநாயகமும் கலந்து கொள்கிறார்கள். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

## பனை அபிவிருத்தி கருத்தரங்கு

(காவலூர்)

பனை அபிவிருத்தி சம்பந்தமான கருத்தரங்கொன்று இன்று புதன்கிழமை வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சடாட்சர சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் பனை அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர். இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளும்படி பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளையும், பொது மக்களையும் பனை அபிவிருத்திச் சபையினர் கேட்டுள்ளனர்.

## கிராம அபிவிருத்தி சங்கம்

(காவலூர்)

வேலணை மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று புதன்கிழமை வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சடாட்சர சண்முகதாஸ் தலைமையில் வேலணை மேற்கு முருகமூர்த்திக் கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கிராம சேவையாளர், கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர், விசேட சேவை அலுவலர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## சிரமதான மூலம் நீர் இறைப்பு

(உடுவில்)

கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக கவனிப்பாரற்று மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்த சங்குவேலி தமிழ் கலவன் பாடசாலைக் கிணற்றை சங்குவேலி ஒன்றிணைக்கப் பட்ட குடும்ப சுகநலத்திட்ட தொண்டர்களும், நலன் விரும்பிகளும் சிரமதானம் மூலம் இறைத்து துப்பரவு செய்துள்ளனர்.

## நிர்வாகிகள்

(காவலூர்)

வேலணை மேற்கு அம்பிகை நகர் அறவழிப் போராட்டக் குழு பாடசாலையின் நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. வே. க. கதிர்காமு, உப தலைவர் திரு. இ. சி. கந்தசாமி செயலாளர் திரு. வி. கந்தசாமி, உப செயலாளர் திரு. ச கதிர்காமு, பொருளாளர் திரு. மு. முத்துலிங்கம்.

# 'பொடிப்பொழுது'க்கு வந்தகடிதமும், விளக்கமும்

பிரதம ஆசிரியர்,
"முரசொலி"
யாழ்ப்பாணம்.

தங்களின் 2.5.87 முரசொலி வெளியீட்டில் பொடிப் பொழுது தலையங்கத்தின்கீழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைபற்றித் தவறான, மக்கள் மனதிலே தப்பான அபிப்பிராயத்தை ஏற்படுத்தக்கூடிய விடயமொன்று வெளியிடப்பட்டுள்ளது என்பதை மிக வருத்தத்துடன் அறியத் தருகிறேன்.

மாவட்ட முகாமையாளரையோ அவர் இல்லாத விடத்து பதில் மாவட்ட முகாமையாளரையோ நேரடியாகச் சந்திப்பதற்கு பொது மக்களுக்கோ, மற்றும் எவருக்குமோ எதுவித தடையும் இல்லை. மற்றைய ஊழியர்களைச் சந்திப்பதற்கு மட்டுமே 'சிற்' முறை நடைமுறைப் படுத்தப்படுகின்றது. இம் முறை கடந்த ஓர் ஆண்டிற்கு மேலாக மாவட்ட முகாமையாளரால் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றது. அலுவலகத்துக்குள் வந்து வீண் அரட்டை அடிப்பவர்களையும் ஏழை கடன் விண்ணப்பதாரிகளைச் சுரண்டி "புரோக்கர்" வேலை பார்ப்பவர்களையும் தடுத்து நிறுத்தும் முறையிலேயே இம்முறை நடைமுறைப் படுத்தப்படுகின்றது. இவ்வாறான விஷமிகளின் செயலே இதுவாகும். பொது மக்கள் இதுவரையும் என்னிடமோ அரசாங்க அதிபரிடமோ எதுவித முறைப்பாடுகளும் செய்யவில்லை.

ஏழை மக்களுக்கு கடன் வழங்கும் விடயத்தில் இச் சபையில் அல்லாத ஓர், இரு அரச ஊழியர்கள் தங்கள் செல்வாக்கைக்கொண்டு அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்ய முற்பட்டபொழுது தடுத்து நிறுத்தப்பட்டமையே இதற்கு மூலகாரணங்களாகும். இவ்வாறான அரச ஊழியர்கள் பற்றி யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் முறையிட நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகின்றதென்பதையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

இ. செல்வராஜா
பதில் மாவட்ட
முகாமையாளர்,
தேசிய வீடமைப்பு
அதிகாரசபை,
யாழ்ப்பாணம்.

**ஆசிரியர் குறிப்பு:**

தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் யாழ்ப்பாண அலுவலகத்தில் 'சிற்' முறை அமுலில் இருப்பதை பதில்மாவட்ட முகாமையாளர் ஒப்புக்கொண்டுள்ளார். யாழ்ப்பாணத்தின் வேறெந்த அலுவலகத்திலும் 'சிற்' முறை அமுலில் இல்லாத இன்றைய காலகட்டத்தில், மேற்படி அலுவலகத்தில் மட்டும் இந்த முறை அமுலில் இருப்பதையே 'பொடிப்பொழுது' சுட்டிக்காட்டியிருந்தது. ஓரிரு அரச ஊழியர்களின் செல்வாக்கையும். துஷ்பிரயோக முயற்சியையும் தடுத்து நிறுத்துவதற்காக, பொதுமக்களைக் கஷ்டத்துக்குள்ளாக்கும் 'சிற்' முறை அவசியம்தானா?

நல்வாக்கு

ஒருவல் தன் நெஞ்சம் அறிவதாகிய ஒன்றைக் குறித்துப் பொய்சொல்லக்கூடாது. பொய்சொன்னால் அதைக் குறித்து தன் நெஞ்சமே தன்னை வருத்தும்

—திருக்குறள்

ஆர். ஜி. பில்டிங், ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 25007, 25008

# இதயநாதம்

## ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் சீதனமே 'பொய்'தான்!

"யாழ்ப்பாணத்தில் எத்தனையோ தடைகள் கொண்டு வரப்பட்டபோதிலும், இங்குவாழும் மக்கள் எந்தக் கஷ்டமுமின்றி வாழுகின்றனர்கள்;

இவர்களுக்கான உணவு, மருந்துப்பொருட்கள் எந்தத் தடையுமின்றி தாராளமாகக் கிடைத்து வருகின்றன".

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சு நேற்றுமுன்தினம் விடுத்த அறிக்கையொன்று மேற்கண்டவாறு கூசாமல் பொய்கூறியுள்ளது.

தமிழக முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் யாழ்ப்பாண மக்களுக்கு நான்குகோடி ரூபா பெறுமதியான உணவு, உடை, மருந்துவகைகளை அன்பளிப்புச் செய்ய முடிவெடுத்துள்ளமை ஸ்ரீலங்கா அரசை உண்மையிலேயே கதிகலங்கச் செய்துள்ளது.

தமிழக அரசின் இந்த மனிதாபிமான நடவடிக்கையை நியாயப்படுத்தும் வகையில் பாரத வெளியுறவுச் செயலர் திரு. கே. பி. எஸ். மேனன் சில தினங்களுக்கு முன் விடுத்த அறிக்கை, ஸ்ரீலங்கா அரசு கொஞ்சம்கூட எதிர்பார்த்திருக்காத ஒன்று.

அதுமட்டுமன்றி, "யாழ்ப்பாணத்தில் வசிக்கும் மக்கள் அப்பாவிகள். அவர்கள் 'ஆயுதம்தாங்கிப் போராடுபவர்களல்ல. அவர்கள் ராணுவ நடவடிக்கைகளால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்'' என்றும் திரு. மேனன் குறிப்பிட்டுள்ளது, இந்திய அரசின்மீது ஸ்ரீலங்கா ஆட்சியாளர்களுக்கு கடுஞ்சீற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

திரு. மேனன் தெரிவித்த கருத்துக்களுக்கு சர்வதேச வெகுஜனத்தொடர்புச் சாதனங்களும் முக்கியத்துவம் கொடுத்துவிட்டபடியால், தனது அராஜக நடவடிக்கைகளை மூடிமறைப்பதற்கான முழுமுயற்சிகளையும் ஜெயவர்த்தனவின் இனப்படுகொலை ஆட்சிக்கும்பல் ஆரம்பித்துள்ளது.

முதலில், கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களை அழைத்து விளக்கம் கொடுக்கப்பட்டது. ஆனால் நினைத்தது போல அது எடுபடவில்லை.

வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களை அழைத்து தர்மிஷ்டத் தலைவர் பேட்டி கொடுத்தார்.

இந்தியாவை ஹிட்லர் என்று கூறப்போய் அது வம்பில் முடிந்துவிட்டது. சும்மாகிடந்த சங்கை ஊதிய ஆண்டியாக ஜே. ஆர். அவஸ்தைப்படும் நிலைக்கு இந்தப் பேட்டி அவரை மாட்டிவிட்டது.

இப்போது வெளிவிவகார பிரதிஅமைச்சர் டிரோன் பெர்னாண்டோ ஐரோப்பிய நாடுகளுக்குப் பறந்துசென்றிருக்கிறார்.

இதுபோதாதென்று, யாழ்ப்பாண மக்கள் எந்த வகையிலும் பாதிக்கப்படவில்லையென்று முழுப்பூசனிக்காயைச் சோற்றுக்குள் மறைக்கும் அறிக்கையொன்றை அரசு விடுத்துள்ளது.

கடல் வலயத்தால் பாதிக்கப்பட்ட பல்லாயிரம் மீனவர்கள்; முகாம்கள் விஸ்தரிப்பினால் வீடு, வாசல், தோட்டம் துரவுகளை இழந்துள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகள்; சொந்தக் குடிமனைகளை இழந்து, தங்கள் சொந்த மண்ணிலேயே வாழவழியின்றிக் கையேந்தி நிற்கும் தமிழ்க் குடும்பங்கள் பற்றி அரசுக்குத் தெரியாது என்று கூறமுடியுமா?

ஒரு கிலோ அரிசியும், கால் கிலோ சீனியும் உணவு முத்திரையாக இந்த அரசாங்கம்தானே கொடுக்கின்றது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் என்று தானே அரசாங்க அதிபர் இதனை வழங்குகின்றார்.

ஆனால் அரசாங்க அறிக்கை சொல்கிறது யாழ்ப்பான மக்கள் எந்தவகையிலும் பாதிக்கப்படவில்லை என்று.

இங்கு எல்லாமே தாராளமாகக் கிடைக்கின்றதாம்.

எல்லாத் தடைகளையும் அமுல் செய்வது போதாதென்று வைத்திய சேவையையும் தடை செய்வதற்காகவே நாளை மறுதினத்துடன் யாழ். ஆஸ்பத்திரியையும் மூடிவிடவேண்டுமென்று உத்தரவிட்டுள்ள அரசு, என்ன மாதிரிப் பொய் சொல்கிறது.

கேடுகெட்ட அரசியல் வாழ்க்கை நடத்தும் படுபாதக கொலைகாரக் கும்பலான ஜெயவர்த்தன குழுவினருக்குப் பொய் சொல்வது ஒரு சின்ன விஷயம்.

பஞ்சமா பாதகங்களையும் கூசாமல் செய்யும் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்குப் பொய் அறிக்கைகள் விடுவது பெரிய வேலையா?

இந்து பத்திரிகையின் ஏப்ரல் 25ஆம் திகதி இதழில் பிரதான ஆசிரிய தலையங்கம் இங்கு மொழிபெயர்த்துத் தரப்படுகின்றது.

# சோகம் நிரம்பிய இலங்கை; இந்தியா என்ன செய்யலாம்?

இலங்கைத் தமிழ் மக்களின் தொல்லைக் காலம், ஆபத்தான ஒரு புதிய கட்டத்திற்கு வந்து விட்டது. அரசாங்கமே தனது நாட்டின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழும், ஒரு பழி பாவமும் அறியாத குடிசனங்களின மீது வானத்திலிருந்து தொடராக காட்டுமிராண்டித்தனமான, ''தண்டனைத்'' தாக்குதல்களை நிகழ்த்தி வருவதோடு இக்கட்டம் ஆரம்பித்தது. இப்பகுதிகள்தாம் பாரம்பரியத் தமிழ்ப் பிரதேசங்கள். இலங்கை அரசின் உத்தியோகபூர்வ கொள்கையினாலும், ''அரசிற்கு முக்கியத்துவமான காரணங்களை முன்னிட்டும்'', இவை இலங்கை அரசாங்கத்தினால் பகைப் பிராந்தியம் எனக் கொள்ளப்பட்டு உள்ளன.

இலங்கைத் தீவின் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமானது தனக்கே உரிய இரண்டகத்தைத் துணைக்கொண்டும் இன்னுமொரு தேவையை முன்னிட்டும், இணக்கப் பேச்சுக்கள் வாயிலான ஒரு தீர்வைச் சாத்தியம் ஆக்கிக்கொள்ளத் தவறிவிட்டது. இத்தீவின் பிரதான அரசியலோட்டத்தின் ஊக்குவிசையாக விளங்குவது, எடுத்ததற்கெல்லாம் மார்தட்டிப் போருக்கு அழைக்கும் ஒரு தன்மை. இத்தன்மையின் நிறைவேற்றமே மற்றைய இத்தேவை ஆகும். இவ்வாறு தவறியதோடு இலங்கை அரசு நின்றுவிடவில்லை.

இலங்கைத் தேச மக்களாக சிங்களவர், தமிழர், மற்றும் பிற இனத்தவர்கள் முதலானோர் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் அனைவரும் ஒரே அன்னையின் மக்கள்; ஒருவர்க்கொருவர் சகோதரர்கள். இப்பேர்ப்பட்ட சகோதரர் சகோதர காதகர்களாகி, ஒருவரை ஒருவர் கொல்லும் அல்லோல கல்லோல நிலைகருள் அவர்கள் எல்லோரையும் தள்ளிவிட்டுள்ளது. ஐ. தே. க. அரசு.

அதன் இச்செயல் அம்பலமாகவே, ஆட்சிப் பதவி வகித்தற்குத் தனது தகுதியை நிலைநாட்ட, இலங்கை அரசு இப்பொழுது முனைந்துகொண்டு இருக்கிறது. அதற்காக, அரச ஆயுதப்படைகளின் பொல்லாப்புப் புரியும், தண்டிக்கும், வளங்களைச் சில இலக்குகள் மீதுகட்டவிழ்த்துவிட்டுள்ளது. ஆனால் விசித்திரம் என்னவென்றால், அடிப்படைப் பொதுஅறிவும், நீதிநியாய உணர்வும் உடையஎவராவது, அவற்றைப் ''பயங்கரவாத'' இலக்குகள் எனவோ, ஆயுத சந்நத்தரான (தமிழீழ விடுதலைப் புலிகளது-''ஈரோஸ்'' இயக்கத்தினது) போராளிகளின் இலக்குகள் எனவோ, கணித்துக்கொள்ள மாட்டார்கள்.

மனித இனப்பிணக்கு தொடர்பில் இலங்கையில் நடைபெற்றுவருவனவற்றின் மீது உலகின் அவதானம் பதிந்து இருக்கிறது. உத்தியோகபூர்வ பிரசாரமும் தகவல் திரித்துக் கூறும் செயல் நயமற்ற எத்தனங்களும் இந்த அவதானத்தைத் திசைதிருப்புவதில் வெற்றிகாண இயலாதவை. வானத்திலின்றும் வெடிகுண்டுகளைப் பொழிதற்கு ஆகாயப்படை விமானங்களையும், ஹெலிக்கப்டர்களையும் பயன்படுத்துவதும், புகலிடமாக இராணுவ முகாம்களின் உள்ளே பாதுகாப்பாக இருந்தவண்ணம் கண்மூடித்தனமாகப் பீரங்கிக் குண்டுகளை ('ஆர்ட்டிலறி ஷெல்லிங்') பிரயோகிப்பதும், இலங்கையில் தமிழரின் உரிமைக் கோரிக்கைப் பிரச்சினையின்பால் இலங்கை அரசாங்கத்தினால் கடைப்பிடிக்கப்பட்டுவரும் ''இருவழித்'' தந்திரோபாயத்தின் தன்மையை உலகிற்குப் பறைசாற்றுகின்றன.

இவை ஒருபுறம் இருக்க, இந்தியாவுக்கும், உலகுக்கும் அத்துலத்முதலிஎன்ன சொல்லி வருகிறார்? சமாதானமான ஓர் அரசியல் தீர்வுக்கு வழிகோலுமுகமாகவே மட்டுப்படுத்தப்பட்ட ராணுவ நடவடிக்கை மார்க்கம் தெரிந்தெடுக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது என்கின்றனர் அவர்கள். இது வெந்து புரையேறிய புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் ஆகும்.

இதுவும் போதாது எனும் பாங்கில், இலங்கைப் பிரதமர் திரு. ஆர். பிரேமதாஸ, அரசாங்கத்தின் தீர்மானமொன்றை இலங்கைப் பாராளுமன்றத்திற்குப் பின்வருமாறு அறிவித்துள்ளார்: இணக்கப் பேச்சுக்கள் வாயிலான ஒரு தீர்வுகாணும் முயற்சிகளை இடைநிறுத்த இலங்கை அரசாங்கம் தீர்மானித்து உள்ளது. ''சமாதானம்'' மீளவும் நிலைநாட்டப்பட்ட பின்பே ஓர் அரசியல் தீர்வுக்கான பிரேரணைகள் கருத்திற் கொள்ளப்படும்.

நியாயத்தை நியாயமாக எடுத்துச் சொல்வதானால், சில விடயங்களை நாம் அவதானத்திற் கொள்ளவே வேண்டும்: கடந்த ஓரிரு நாட்களாக இலங்கை அரச பயங்கரவாதக் கோர தாண்டவமானது கேட்போர் மனம் துணுக்குறும் வகையில் பொது மக்களைப் பலியெடுத்து உள்ளமை மெய்யே. ஆயினும், அது குறித்தவொரு தீவிரவாத வன்செயலை, 1987 ஏப்ரல் இருபத்தோராம் திகதி, செவ்வாயன்று கொழும்பு மாநகரின் நடு மத்தியில் நேர்ந்த ஒரு குண்டுவெடிப்புச் சம்பவத்தை தொடர்ந்த ஒரு நிகழ்வேயாகும். இவ்வன்செயலின்வெளிப்பாடாகச் சம்பவித்த சக்திமிக்க, குண்டுவெடிப்பில் உயர்தொழில் நுட்பம் பிரயோகமாகியுள்ளது. குழந்தைகள், பெண்கள் உட்பட, எத்தனையோ அப்பாவி உயிர்களை மாய்த்த இச்சம்பவம் கல்நெஞ்சையும் கசிந்து உருக வைக்கும்.

அதற்கு முன்னர் வேண்டுமென்றே மறைந்திருந்து தாக்கிப் படுகொலை செய்யப்பட்ட பஸ்வண்டிப் பயணிகளாகிய சிங்களவருள், பெருந்தொகையானோர் இராணுவத்தினரே. அப்பயணிகள் படுகொலைக்கு நேரடுத்து முந்தி இலங்கையின் வடக்கிலும், கிழக்கிலும் 'பயங்கரவாத' எதிர்போராட்டத்தின் பெயரால் பந்தோபஸ்துப் படையினர் நீடித்து நடத்திவந்த பகைமை நடவடிக்கைகளுக்கு மிக அதிகமாக இலக்கானோர் தமிழ் குடிசனங்களேயாவர்.

இந்த அட்டூழியங்களுக்குக் காரணர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் அதன் தோழன் 'ஈரோஸ்' இயக்கமும்தான் என இலங்கை அரசாங்கம் விரைந்து குற்றம் சாட்டியது. இப்போராளி இயக்கங்களோ, தமக்கு இச்செயல்களில் எதுவித தொடர்பும் கிடையாது என அதேயளவு சீக்கிரம் மறுப்பு வெளியிட்டு உள்ளன. எனவே இவை எல்லாவற்றையும் ஒருங்கு நோக்கினால், நிலைமையின் தன்மை வரவரச் சீரழிந்து போவது தெரியும்.

இனி இலங்கைப் பாராளுமன்றத்தின்கண் சிறீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த அதன் உறுப்பினர் ஒருவர், கொழும்பு மத்திய பஸ்நிலையக் குண்டுவெடிப்பு ஓர் 'உள்ளாள் வேலை' எனவும், அது இஸ்ரேலிய துணையுடன் நிறைவேற்றப்பட்டது எனவும், மக்களிடையே நிலவும் சந்தேகங்கள் பற்றி அறிவித்தார்.

இச்செயல்களுக்கான பொறுப்பு எங்கு உள்ளதாயினும் ஆதக. சில மெய்ம்மைகள் மட்டும் ஐயத்திற்கு இடமின்றிப் புலனாகின்றன. 1983 ஆம் ஆண்டு தொட்டு நடந்தேறி வந்துள்ள நிகழ்வுகளானவை ஒரு ஜனநாயகக் கண்ணோட்டத்தில், ஒரு நச்சு வட்டச் சுழற்சியாக உருவெடுத்து வந்துள்ளமையைக்காணலாம். இன்னும் நோக்கினால், மிகச் சமீப காலமாக, வன்செயல்கள் வரவர மேலோங்கி வருகின்றன; அற்பகாரியங்களுக்கெல்லாம்மார்தட்டிப் போர்ப்பறை முழக்குவதும், தீவிரவாதமும், பிடிஇறுகி வரலாகியுள்ளன; இத்தீவினது ஆட்சிமுறைமையின் கீழ் ஒழுங்கமைந்தோரும், சமுதாயமும், முழுவளர்ச்சியடைந்த நெருக்கடி ஒன்றுக்கு ஆளாகி இருக்கின்றனர் என்பனவும் தென்படும்.

இவற்றைக் குறிப்பாக, தெளிய எடுத்துரைப்போம். ஒருபக்கம் பகைப்படை சூழவுள்ள தமிழ் மக்கள், அல்லல் தொல்லைகளுக்கு ஆளாகி தனிமைப்படுத்தப்பட்டு உள்ளனர். மறுபக்கம், ஓர் அரசியல் சமுதாய விசித்திர நிகழ்வாக தமிழர்க்கு எதிரான உணர்வுகள் வளர்ந்து வருகின்றன. அஃது ஒருபுறமும், ஜயவர்த்தன அரசின் மீதான சீற்றம், மனக்கசப்பு என்பன மறுபுறமுமாக, அவ்வரசின் எதிர்காலத்தையிட்டு அதற்கு ஆழ்ந்த தலையிடியாக இருத்தல் வேண்டும்.

[நாளை தொடரும்]

## இலவச வகுப்பு

[கொழும்புத்துறை]

அராலி கிழக்குக் கிராமத்தில் அராலி ஐயனார் கல்வி அபிவிருத்திக் கழகம் இரவு நேரத்தில் இலவச வகுப்புக்களை நடாத்தி வருகின்றது. இதனால் இக்கிராமப் பிள்ளைகள் பெரிதும் நன்மையடைந்துள்ளனர்.

# வெளிச்ச வெளிது

புறக்கோட்டை குண்டுவெடிப்புச் சம்பவத்தின்போது இடம்பெற்ற நிகழ்ச்சி இது.

காயமுற்றுக் கிடந்த பயணிகளுக்கு உதவ முன்வந்த பலர் பயணிகளின் கையிலும்கழுத்திலுமிருந்தமணிக்கூடு, காப்பு, சங்கிலி ஆகியவைகளை அபகரித்துச் சென்றுவிட்டனர்.

ஏறத்தாழ எண்பது பேரின் உடைமைகள் இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ளன.

ஐ. தே. கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள தேசிய தொழிற்சங்க சம்மேளனக் காரியதரிசி திரு. ராஜா செனிவரத்தின விடுத்துள்ள அறிக்கையொன்றில், 'பஸ் நிலையத்தில் குண்டு வைத்தவர்களைவிட இவ்வாறு பகற் கொள்ளையடித்தவர்களே தேசத்துரோகிகள்' என்று சரியாகச் சொல்லியுள்ளார்.

உக்கிரன்

தென் ஆபிரிக்காவுடன்

# யுத்த நிறுத்த உடன்பாடு காண 'ஸ்வாப்போ' தயார்

[லூசாக்கா]

தென் ஆபிரிக்காவுடன் யுத்த நிறுத்த உடன்பாடு ஒன்றைக் காண்பதற்கு தென் மேற்கு ஆபிரிக்க மக்கள் விடுதலை இயக்கமான 'ஸ்வாப்போ' என்றும் ஆயத்தமாகவே இருக்கிறது.

இவ்வாறு 'ஸ்வாப்போ' அமைப்பின் தலைவர் சாம் நிஜோமா தெரிவித்துள்ளார்.

ஸாம்பியத் தலைநகர் லூசாக்காவில் நடைபெற்ற உலக கிறிஸ்தவ திருச்சபை கழகத்தின் பிரதிநிதிகள் கூட்டத்தில் நிஜோமா நேற்று முன் தினம் உரையாற்றிய போதே இந்த அறிவிப்பை விடுத்தார்.

தென் ஆபிரிக்கா, மற்றும் நமீபிய விவகாரங்கள் தொடர்பாகவே இந்தக் கூட்டம் நடைபெற்றது.

டாக்டர் நிஜோமா அங்கு தொடர்ந்து பேசுகையில்;

ஐக்கியநாடுகள்பாதுகாப்புச் சபைத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வகை செய்யக்கூடியதாக இப்படியொரு யுத்த நிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப்படுவதைதாம்விரும்புவதாகஅவர் அங்குதெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைதீர்மானம் இந்தப் பிராந்தியத்தில் சமாதானத்தையும் உறுதிப்பாட்டையும் உருவாக்குவதைக் கருத்திற் கொண்டதாகும்.

இந்ததீர்மானத்துடன் தென் ஆபிரிக்க தலைவர் போத்தா இணங்கிப்போகமறுப்பதற்கு நிஜோமா பலமான கண்டனம் தெரிவித்தார்.

தென் ஆபிரிக்க அரசை வழிபடுத்தக் கூடிய நிர்ப்பந்தங்களையும் நெருக்குதல்களையும் உலகநாடு மேற்கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோள் ஒன்றையும் அவர் விடுத்துள்ளார்.

## பாரத ஜனாதிபதி பிறந்த தினம்

(புதுடில்லி)

பாரதஜனாதிபதி ஜெயில்சிங் தமது 71-வது பிறந்த தினத்தை ராஷ்டிரபதி பவனில் நேற்றுக் கொண்டாடினார்.



பாதுகாப்பான
வெண்
சலவைக்கு
தேசிக்காய் வாசனையுடன்
எம்டீ சோப்
எம்டீ என்ரபிறைஸஸ் அச்சுவேலி.

# இன்றைய பலன்

**மேடம்:** போகும் இடம் எல்லாம் பகை, பொருள் நட்டம், மாதுரு வழிக்கவலை, அரசபயம், நீண்ட நாள் நட்பில் முறிவு, உடல் நலக் குறைவு.

**இடபம்:** உடன்பிறப்புக்களால் நன்மை, தூரத்து உதவி கிட்டும், வாகனச் சிறப்பு, வருமானம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** வாக்கு வசீகரம், திருப்தியான பொருள் வரவு, மாங்கல்யவிருத்தி, மாமன்வழி உதவி, நீண்ட நாள் பகை நீங்கும்.

**கடகம்:** பொருள் நட்டம், திருடர் பயம், வாக்குக் கலகம், வீண்பழி கேட்டல், அடக்கம் நன்று, தெய்வவழிபாடு நன்மை தரும்.

**சிங்கம்:** இருதயரோகபீடை, தூரதேசம் போனவர் வீடு வந்து சேர்வர், பூமியால் நன்மை, பொருட் செலவு, பெரியோர் உதவி.

**கன்னி:** அதிக இலாபம், வீண் பழி தேடி வரும், உள் வீட்டுப் பூசல் மனதை வருத்தும், அவசர முடிவைத்தவிர்த்தல்நன்று.

**துலாம்:** புத்திரர் வழியால் நன்மை, இரு தொழிலால் வருவாய் அதிகம், இனசன வழியால் யோகம், மனையில் மங்கள காரியம், குதூகல வாழ்வு.

**விருச்சிகம்:** பிதாவழி உதவி, எதிர்பாராத பொருள் வரவு, சகோதர வழியில் விவாகப் பேறு, கிடைக்காதென நினைத்தது கிடைக்கும்.

**தனுசு:** வாதரோக பீடை, வஞ்சகர் உறவு, பெண்களால் பகை, பெரிய இடத்து உதவி தடை, வாகனாதிகளால் நஷ்டம், வீண் செலவு.

**மகரம்:** நன்மை செய்து புகழ் கேட்பீர், பெரியோர் ஆசி, பணவசதி அதிகரிப்பு, சகோதர வழி உதவி.

**கும்பம்:** நீண்டநாள் பகையால் மனத்துயர், யோசனை அதிகம், வீண்பிரயாசம், அலைச்சல் மிகுதி.

**மீனம்:** புத்திரரால் மகிழ்ச்சி, மனையில் சிறப்பு, பூமிப் பேறு, விருந்துபசாரம், நல்லோர் உறவு.

யாழ். சோதிடர்
ச. அரியநாயகம்

யாழ். பல்கலைக்கழக ஆசிரியசங்கம் கண்டனம்:

# யாழ். ஆஸ்பத்திரி மூடுவது கண்மூடித்தனமான செயல்

யாழ்ப்பாணம் அரசினர் போதனா வைத்தியசாலையை இம்மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னராக மூடிவிடும்படி போதனா வைத்தியசாலை அமைச்சின் செயலாளரால் விடுக்கப்பட்ட உத்தரவையிட்டு தாம் அதிர்ச்சியடைவதாக யாழ். பல்கலைக்கழக ஆசிரிய சங்கம் அனுப்பி வைத்துள்ள பத்திரிகைஅறிக்கையில் தெரிவித்துள்ளது. அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

யாழ். போதனா வைத்தியசாலை யாழ். குடாநாட்டுக்கு மட்டுமல்லாமல் வட மாகாணத்திற்கும் உரிய நவீன வசதிகள் கொண்ட ஒரேயொரு வைத்தியசாலை ஆகும். இப் பிரதேச மக்களின் வைத்தியத் தேவைக்கு இதைவிட்டால் வேறு வழியில்லை. இதுமட்டுமன்றி யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவத் துறையாக போதனா வைத்தியசாலையாகவும் திகழ்கின்றது.

இந்நிலையில் இந்த வைத்தியசாலையை மூடுதல் ஏற்கனவே சொல்லவொண்ணாத் துன்பங்களுக்கு உள்ளாகிய மக்களை மரணத்தின் விளிம்புக்குத் தள்ளுவதாகும்.

விமானக் குண்டுவீச்சு, ஷெல் வீச்சு, ஹெலிகொப்டர் தாக்குதல் என்பனவற்றால் நித்தம் பல நூற்றுக்கணக்கான மக்களைக் கொன்று குவித்துக் கொண்டு யாழ். வைத்தியசாலையையும் மூடிவிடுதல் தர்மமற்றது.

ஆகவே, யாழ். போதனா வைத்தியசாலையை மூடிவிடுதல் என்பது கண்மூடித்தனமான நடவடிக்கையாகும். இந்த உத்தரவை உடனடியாக வாபஸ் பெறுமாறு யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்கின்றது.

## நோயாளரின் கவனத்துக்கு

இம் மாதம் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் யாழ் போதனா வைத்தியசாலையை மூடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளதினால் இந்த வைத்தியசாலையில் கிளினிக்குகளில் சிகிச்சை பெற்று வந்த அனைவரும் தமது கிளினிக் மருத்துவ குறிப்பு புத்தகங்களை உடனடியாக வைத்தியசாலையில் இருந்து பெற்றுச் செல்லுமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் சி.எஸ்.நச்சினார்க்கினியன் அறிவித்துள்ளார்.

## பருத்தித்துறை சிப்பாய் தற்கொலை

பருத்தித்துறை ராணுவ முகாமைச்சேர்ந்த சிப்பாய் ஒருவர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்ததாக அறிவிக்கப்படுகிறது. கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஜீ.வி பிரேமலால் ரட்ணபந்து (27) என்ற சிப்பாயே இவ்வாறு மரணமானவராம்.

இரு தினங்களுக்கு முன்னரே இவர் கடமைக்குவந்ததாக மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

# கம்யூனிஸ்ட் கிளை கண்டனம்

பேரினவாத ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் யாழ் பொது மருத்துவ மனையை வெள்ளிக்கிழமையுடன் மூடும்படிஉத்தரவிட்டமை அரசின் உண்மையான நோக்கத்தை அம்பலப் படுத்திவிட்டது.

இப் பகுதியில் வாழும் தமிழ் பேசும் மக்கள் தங்களுடைய பிரஜைகள் என்பதை இந்த அரசு ஒப்புக்கொள்ள மறுப்பதை இந்த அநாகரிகமான செயல் எடுத்துக்காட்டுகிறது என இலங்கைகம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்ட இணைச் செயலாளர் திரு.எஸ். விஜயானந்தன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
JAFFNA MUNICIPAL COUNCIL

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## அமைப்பு வேலைக்கான கேள்வி அறிவித்தல்

பின்வரும் அமைப்பு வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 1987 ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

அட்டவணை

| இல. | வேலை விபரம் | கேள்விப் பிணைப் பணம் (மீளளிக்கப் படக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்கப்பட முடியாதது) | ஒப்பந்தகாரர் பதிவுத் தொகை |
|---|---|---|---|---|
| 01. | குருநகர் சந்தையில் வெளிப்புறமாக மாடிப் படிகள் அமைத்தல். | 500/- | 100/- | 50,000/- |

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 1987 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிவரை மேலேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணைப்பணம், கேள்விப்படிவக் கட்டணம் ஆகியவற்றைச் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களின் இணைப்பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சிமன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
28 - 04 - 87.

சி. வீ. கே. சிவஞானம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

05017

06-05-1987 புதன்கிழமை

# முரசொலி

தேசிய தமிழ்த் தினசரி

MURASOLI

★ நேற்று நடத்தப்பட்ட இரண்டாவது தாக்குதல்

# கோட்டை ராணுவம் குறிபார்த்துச் சுட்டு கான்ஸ்டபிள் காயம்

யாழ். பொலிஸ் நிலையத்திற்குக் கடமைக்குச் சென்றுகொண்டிருந்த தமிழ் பொலிஸார் நேற்றுக்காலை கோட்டை சென்ரியில் இருந்து ஏவப்பட்ட மோட்டார்ஷெல்களில் இருந்து மயிரிழையில் உயிர்தப்பினர்.

நேற்றுக்காலை சுப்பிரமணியம் பூங்காவிற்கு அருகில்இச் சம்பவம் நடந்தது.

பொலிஸார் வழமைபோல் ஒன்றாக கடமைக்குச் சென்றுகொண்டிருந்த சமயம் கோட்டை சென்ரியில் இருந்து பொலிஸாரை நோக்கி அடுத்தடுத்து மூன்று ஷெல்களை இராணுவத்தினர் ஏவினர். இச்ஷெல்கள் பொலிஸாருக்கு சற்று அப்பால் சுப்பிரமணியம் பூங்காவினுள் விழுந்து வெடித்ததினால் அவர்கள் மயிரிழையில் உயிர்தப்பினர்.

இச்சம்பவத்தினால் அதிர்ச்சியடைந்த பல பொலிஸார் கடமைக்குச் செல்லாது திரும்பி வீடுகளுக்குச் சென்றனர்.

இதேவேளை நேற்று பிற்பகல் இரண்டு மணிபோல் கடமை முடிந்து திரும்பிக்கொண்டிருந்த பொலிஸாரை நோக்கி இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பொலிஸ்காரர் ஒருவர் படுகாயமடைந்து யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மூளாயைச் சேர்ந்த எஸ். இரத்தினசபாபதி (49) என்ற பொலிஸ்காரரே நேற்று காயமடைந்தவராவார். கடமை முடிந்து புறப்பட்ட பொலிஸாரை வரிசையாக வெளியே போகுமாறு இராணுவத்தினர் பணித்ததாகவும் அதற்கேற்ப அவர்கள் சென்றுகொண்டிருக்கையில் செல்வா சமாதிக்கு அருகில் அவர்கள் மேல் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. பொலிஸ்காரர் காயமடைந்து கீழே விழுந்ததின் பின்னர் மற்றவர்களை நோக்கி நான்கு தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாம்.

யாழ். அரச அதிபர் சொல்கிறார்:

## பதவியை ராஜினாமா செய்ய நான் கவலைப்படவில்லை!

நேற்று ஊர்வலமாகச் சென்ற வைத்தியசாலை ஊழியர்கள் செயலகத்தில் அரசாங்க அதிபரைச் சந்தித்து அவரிடம் வைத்தியசாலையை மூடவேண்டாம் என்ற கோரிக்கை அடங்கிய மகஜரைக் கையளித்தனர். அச்சமயம் அங்கு நின்ற சிலர் அரசாங்க அதிபர் தனது பதவியை ராஜினமாச் செய்து இது விடயத்தில தனது எதிர்ப்பை அரசுக்குத் தெரிவிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இவர்களது கோரிக்கைக்கு அரசாங்க அதிபர் பதிலளிக்கையில் "நான் இப்போது பெயரளவில் தான் அரசாங்க அதிபராக இருக்கிறேன். ஆங்கில ஆட்சிக் காலத்தில் அரசாங்க அதிபர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்கள் எனக்கும் உண்டு என இப்போதும் சிலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தைப் பொறுத்த விடயங்களைப்பற்றிய முக்கிய முடிவுகள் எல்லாம் இப்போது கொழும்பில்தான் எடுக்கின்றார்கள். அதுபற்றி எம்முடன் அவர்கள் ஆலோசனை கூட இப்போது செய்வதில்லை நான் எனது பதவியை ராஜினமாச் செய்வதைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் என்னுடைய நிலையை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றே விரும்புகின்றேன்" என்று கூறினார்.


"யாழ் போதனா வைத்தியசாலையை மூடுமாறு எழுதப்பட்ட கடிதம் இரண்டரை வரிகளில் எழுதப்பட்டிருக்கின்றது. இதுவிடயத்தில் கொழும்பில் உள்ளவர்கள் எம்மையும் கலந்தாலோசனை செய்திருக்கலாம். அதை விடுகது இது விடயத்தில் அவர்கள் தங்கள் எண்ணப்படி முடிவெடுத்து அதை அமுல் செய்யும்படி இங்கு அறிவித்திருக்கிறார்கள். இப்போது யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் எஞ்சியிருக்கும் அரச சேவைகள் மின்சார, வைத்திய, செயலகச் சேவைகள் மட்டுமே, அதிலும் வைத்திய சேவைக்கு இப்போதுஆபத்துவந்துவிட்டது" எனவும் அரசாகங் அதிபர் அங்கு மேலும் தெரிவித்தார்.

## ஆஸ்பத்திரி மூடும் உத்தரவை கண்டித்து நடந்த ஊர்வலம்

யாழ்.போதனா வைத்தியசாலையை எட்டாம் திகதியுடன் மூடுமாறு விடுத்த உத்தரவை எதிர்த்தும், இந்த உத்தரவை ரத்துச்செய்யுமாறு கோரியும் நேற்று யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்கள், வைத்தியசாலை நலன்புரிகள் ஒன்று சேர்ந்து நகரில் பெரும் எதிர்ப்பு ஊர்வலத்தை நடாத்தினார்கள்.

காலை 9.15 க்கு யாழ்.அரசினர் வைத்தியசாலையில ஆரம்பமான இந்த ஊர்வலத்தில் வைத்தியர்கள், தாதிமார், மருத்துவ பீட மாணவர்கள், வைத்தியசாலைஊழியர்கள், பயிற்சி தாதிகள் ஆகியோரும் நலன் விரும்பும் பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர். 'அப்பாவி நோயாளர்களை படுகொலை செய்யாதே, 'வைத்திய சேவையை மறுக்காதே' மனித உரிமையை மீறாதே,' 'இன ஒழிப்பின் அடுத்தபடி வைத்தியசாலை மூடுவிழவா?', 'ஹிட்லரின் ஆட்சியில் கூட வைத்தியசாலைகளுக்கு பாதுகாப்பு சர்மிஷ்ட ஆட்சியில் மூடுவிழா' 'ஏழுமுறை ஷெல்லடி எட்டாம் திகதிமூடுவிழா' போன்ற பல சுலோகங்கள் ஊர்வலத்தில் காணப்பட்டன.

ஆஸ்பத்திரி வீதியின் வழியாகச் சென்ற இந்த ஊர்வலம் யாழ்.செயலகத்தை சென்றடைந்த சமயம் யாழ்.செயலகம் மூடப்பட்டிருந்தது. இதனால் ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்கள் சுலோகங்களுடன் அமைதியாக செயலக பிரதான வாயிலின் முன்பாக நிலத்தில் அமர்ந்திருந்தனர். பின்னர் அரசாங்க அதிபர் வரவழைக்கப்பட்டு, செயலகம் திறக்கப்பட்டது. யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் சி.எஸ். நச்சினார்க்கினியன் வைத்தியசாலையை மூடும் உத்தரவை ரத்துச்செய்யுமாறு கோரும் மகஜரை அரசாங்க அதிபர் திரு எம்.பஞ்சலிங்கத்திடம் கையளித்தார்.



யாழ்.ஆஸ்பத்திரி ஊழியர்கள் தங்களின் ஆட்சேப மகஜரை அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்திடம் நேற்று கையளித்தனர். ஆஸ்பத்திரி சுப்பிரின்டன் டாக்டர் நச்சினார்க்கினியன், டாக்டர் எஸ். சிவகுமாரன், டாக்டர் சிர் மாறன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

ஈழவர் முன்னணி கண்டனம்:

## தமிழ்பகுதி நோயாளிகளை இறக்கவைக்கும் முயற்சி

தமிழ் பேசும் ஈழவர்களின் போராட்டத்கை முறியடித்து அவர்களை இராணுவ விமான பொம்பர், ஹெலித் தாக்குதல்களில்லை கொன்று குவித்து வரும் சிறீலங்கா அரசு மேலும் இராணுவத் தாக்குதல்களை நடாததும் பொருட்டு எதிர் வரும் 8 ஆந் திகதி தொடக்கம் யாழ். அரசாங்க வைத்தியசாலையை மூடும்படி உத்தரவிட்டிருப்பதை ஈழவர் முன்னணி வன்மையாகக் கண்டிக்கின்றது.

உரிமைகள் யாவற்றையும் இழந்து பல இழப்புக்களின் மத்தியில் போராட்டத்தை முன்னெடுத்துக் கொண்டிருக்கும் இவ் வேளையில், யாழ். வைத்தியசாலையையும் மூடி, நோயினால் இறக்க வைக்க முயற்சி செய்யும் இந் நடவடிக்கையானது ஈழவர்கள் மீது மேற் கொண்டுள்ள அரச இன ஒடுக்கு முறையின் இன்னொரு வடிவமாகும்.

காரணம் எதுவுமின்றி வைத்தியசாலையை மூடிவிடும்படி போதனா வைத்தியசாலைகள் அமைச்சு, யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு விடுத்த உத்தரவை வாபஸ் பெறும் வரை போராடுவோம் என்ற நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் ஈழவர்கள் அனைவரும் அரசின் இக்கொடூரமான நடவடிக்கையைக் கண்டிக்கும் பொருட்டு அரசுக்கு எதிர்ப்பைத் தெரிவிக்குமாறு ஈழவர் முன்னணி வேண்டுகோள் விடுக்கின்றது.

### அவசர வேண்டுகோள்

இன்று காலை பத்து மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட சகல வருட மாணவர்களையும் மருத்துவபீடத்தில் ஒன்று கூடுமாறு மருத்துவ மாணவர் ஒன்றியம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

### முல்லைத்தீவில் ராணுவம் சுட்டு கணபதி மரணம்

நேற்றுக்காலை 6 மணிபோல் முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் ஒருவர் கொல்லப்பட்டார். பலர் காயமடைந்தனர். வண்ணான் குளத்தைச் சேர்ந்த கணபதி (30) என்பவரே இச் சம்பவத்தில் கொல்லப்பட்டவராவார்.

### யாழ். உயர்...

யும், போதனா வைத்தியசாலைகள் அமைச்சர் சுலைத்திராரணசிங்காவையும் மற்றும் அமைச்சு உயர்அதிகாரிகளையும் சந்தித்து யாழ். வைத்தியசாலையை மூடும் உத்தரவை உடனடியாக கைவிடுமாறு நேரில் கோரிக்கை விடுவர். இந்த வைத்தியசாலையை மூடுவதினால் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்தும் இவர்கள் கொழும்பில் எடுத்துரைப்பர்.

இந்த தூதுக்குழுவினர் எடுக்கவிருககும் இறுதிமுயற்சி தோல்வியடையும் பட்சத்தில் யாழ். போதனா வைத்தியசாலையை நாளை மறுதினத்துடன் அமைச்சு உத்தரவுப்படி மூடவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

இந்த தூதுக்குழுவினர் இது விடயமாக நேற்று யாழ். செயலகத்தில் இருந்து கொழும்புடன் தொடர்புகொள்ள முயன்றனராகிலும் அரசாங்க அதிபரின் விசேட தொலைபேசி இணைப்பு நேற்று இராணுவத்தினரால் துண்டிக்கப்பட்டிருந்ததினால் அந்த முயற்சி கைகூடவில்லை.

### மினிபஸ்...

தார்கள். வான் கோப்பாய் சுடலைக்கும்-கோப்பாய் பாலத்திற்கும் இடையில் சென்றுகொண்டிருக்கையில் அவ்விடத்திற்கு வந்த ஹெலிகப்டர் ஒன்று வானின் கூரையின் மேல் இருந்தவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. வான் வேகமாக ஓட முற்பட்டதால் ஹெலிகப்டர் வானை துரத்தித்துரத்திச் சுட்டது. அச்சமயம் வானின்மேல் இருந்த வயோதிபர் ஒருவரும், இளைஞன் ஒருவனும் சூடுபட்டு கீழே வீதியில் விழுந்தனர்.

சூடுபட்டு வானில் இருந்து கீழே விழுந்தவர்களில் அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி பாக்கியராசா (60) வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படுகையில் மரணமானார். நாவாந்துறையைச் சேர்ந்த பிலுப்பையா அன்ரனி (17) படுகாயமுற்ற நிலையில் யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிலமணி நேரத்தின் பின்னர் மரணமானார்.

இப்பாதையால் வந்த வேறு வாகனங்களையும் ஹெலிகப்டர் துரத்திச் சுட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

### கைதிகள்...

ளிகளும்கொல்லப்பட்டார்கள்

21-05-1985இல் ராணுவ வாகனமொன்றைப் படமெடுக்கும்போது கைதான காமினி (பேவியன் காமினி அனஸ்லீன்) 19-12-1986இல் இடம்பெற்ற கைதிகள் பரிமாற்றத்தின் போது மேஜர் அருணாவுடன் விடுதலையானார்.

மாத்தளையைச் சேர்ந்த பொடிஅப்புஹாமி (பேபி) என்ற சிங்களவரே காமினியின் தந்தையாவார். இவரது தாயார் குருநகரைச் சேர்ந்தவர்.

கைதிகள் பரிமாற்றத்தின் போது விடுதலையாகி வந்ததும், "தமிழர்களின் போராட்டம் ஒரு நியாயபூர்வமான போராட்டம். இதனால் நான் சிங்களவரா இருந்தபோதிலும் எனது பங்களிப்பையும்இதில் செலுத்தவிரும்பினேன்" என்று 'முரசொலி'க்கு அளித்த பேட்டியில் காமினி தெரிவித்திருந்தார்.

வீரமரணமடைந்த காமினிக்கும், தாஸனுக்கும் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றார்கள்.

### யாழ்...

அமுலுக்குக் கொண்டு வர உத்தேசித்துள்ளமையையும் அவதானிக்கும் போது, தொடர்ச்சியான தாக்குதலொன்றை ராணுவம் ஆரம்பிக்க இருப்பது புலனாகின்றது.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் [பிறைவேற்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, 62ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப்பிரிவில் 06-05-87 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.